# சங்க இலக்கியப் பாடல்களில் மக்களின் வாழ்விடம்

**ஜெ. கவிதா / J. Kavitha***
பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி / Pusocoara Krishnammaal Ladies College
கோயமுத்தூர் / Coimbatore
jkavitha@psgrkcw.ac.in

Manuscript received 1 April 2021
Manuscript accepted 15 June 2021
*Corresponding author/First Author

## Abstract
Literature is like a time travel machine, which takes us to past, present and future through the writings. The cluster of people had formed the society and developed the culture. The ancient culture is the basement for our developing society. Humans have been building homes and structures for centuries. Ancient buildings give us hints into cultural and religion motivates of these who build before us. There's Certainly plenty of evidence that early humans made use of naturally formed shelters such as caves we don't know exactly when humans first started constructing their own shelters what we know is pretty much based on supposition and observing the way nomadic people still live in remote parts of the world. During the period of Colonization, the refugees moved to different places and settled temporarily at those places for survivability which led to the formation of different communities. They also divided the land among themselves for their livelihood. Every individual had the responsibilty for creating a welfare society where they had a good understanding and unity among themselves. This helped them in developing their life style, way of thinking, habit and artistic view which paved the way for the development of culture. The Industrial society has its evolution from these roots. The main cause for the development is because of the ancient people. Though there are many witnesses of development in various fields, this research paper mainly focuses on the traditional architecture. Initially, humans led their life as nomads for their survival. After ages, they got settled at various places and constructed their own civilization. This paper aims to give a descriptive study on the lifestyle of people during Sangam age.

Key words: Kalvettukal, Uraiyul, Thinaai, Maharameen , Karandhuvaral, Yezhune, Fine Arts

## ஆய்வுச் சுருக்கம்
உலகின் நாடோடிகளாய் பிறந்த காலகட்டத்தில் மனிதன் அகப்புறக் காரணிகளின் பாதிப்பிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள தற்காலிக இருப்பிடங்களைத் தீர்மானித்து இருக்கலாம். பின்னர் அம்மனிதன் இடம்பெயர்ந்து ஆற்றங்கரைகளில் தங்கி பல இனக்குழுக்களாகப் பிரிந்து ஒரு சமுதாய நிறுவனமாக நில உடைமைச் சமுதாயமாக திகழ்ந்து ஒரு காலகட்டத்தில்தான் தனக்கென நிலையான ஓர் இருப்பிடம் 'உறையுள்' தேவையென நினைத்து அதனைத் தீர்மானித்து இருக்கலாம். இது ஒரு முகமே. தனி மனிதனே சமூகத்தின் ஆணிவேர். இவனுள்ளிருந்தே சமூக வளர்ச்சிக்குரிய கிளைகள் தோற்றம் பெறுகின்றன. இக்கிளைகளின் ஒருங்கிணைப்பும் சமூக வளர்ச்சிக்கு வித்திடுகின்றது. பல சமுதாயங்கள் ஒன்றிணைந்து வாழத் தலைப்படும் போதே வாழ்க்கை நெறி, பழக்க வழக்கங்கள், கலையுணர்வு, சிந்தனை முயற்சி அனைத்தும் தோன்றி இணைந்து ஒருவகை சமுதாயச் சிந்தனையாகப் பரிணமிக்கின்றது. இத்தகைய சமுதாயச் சிந்தனையே சமூகத்தை மெல்ல மெல்ல பண்பாடு என்னும் வழித்தடத்திற்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறு தோற்றம் பெற்ற வாழ்விடம் பற்றிய சிந்தனைகள் கால மாற்றத்தாலும் நாகரிக புற வளர்ச்சியாலும் மிகப்பெரிய மாற்றங்களைப் பெற்று, பல தொழில் நுட்பங்களை உள்ளடக்கியதாய் இன்று நாம் காணும் வளர்ச்சியை அடைந்திருக்கின்றது எனலாம். இத்தகைய வளர்ச்சி நிலையினை ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கம்.

**திறவுச்சொற்கள்**: கல்வெட்டுகள், உறையுள், திணை, மென்கலைகள், நுண்கலைகள்

**முன்னுரை**

உலகின் நாடோடிகளாய் பிரிந்த காலகட்டத்தில் மனிதன் அகப்புறக் காரணிகளின் பாதிப்பிலிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள தற்காலிக இருப்பிடங்களை தீர்மானித்து இருக்கலாம். பின்னர் அம்மனிதன் இடம்பெயர்ந்து ஆற்றங்கரைகளில் தங்கி பல இனக்குழுக்களாகப் பிரிந்து ஒரு சமுதாய நிறுவனமாக நில உடைமைச் சமுதாயமாக திகழ்ந்து ஒரு காலகட்டத்தில்தான் தனக்கென நிலையான ஓர் இருப்பிடம் 'உறையுள்' தேவையென நினைத்து அதனை தீர்மானித்து இருக்கலாம். இது ஒரு முகமே.

தனி மனிதனே சமூகத்தின் ஆணிவேர். இவனுள்ளிருந்தே சமூக வளர்ச்சிக்குரிய கிளைகள் தோற்றம் பெறுகின்றன. இக்கிளைகளின் ஒருங்கிணைப்பும் சமூக வளர்ச்சிக்கு வித்திடுகின்றது. ஏனெனில் பல சமுதாயங்கள் ஒன்றிணைந்து வாழத் தலைப்படும் போதே வாழ்க்கை நெறி, பழக்க வழக்கங்கள், கலையுணர்வு, சிந்தனை முயற்சி அனைத்தும் தோன்றி இணைந்து ஒருவகை சமுதாயச் சிந்தனையாகப் பரிணமிக்கின்றது. இத்தகைய சமுதாயச் சிந்தனையே சமூகத்தை மெல்ல மெல்ல பண்பாடு என்னும் வழித்தடத்திற்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறு தோற்றம் பெற்ற வாழ்விடம், வாழ்விடம் பற்றிய சிந்தனைகள் கால மாற்றத்தாலும் நாகரீக புற வளர்ச்சியாலும் மிகப்பெரிய மாற்றங்களைப் பெற்றுஇ பல தொழில் நுட்பங்களை உள்ளடக்கியதாய் இன்று நாம் காணும் வளர்ச்சியை அடைந்திருக்கின்றது எனலாம். திட்டமிடப்பட்ட நகரமைப்புகளும், வானளாவி நெடி துயர்ந்து நிற்கும் கட்டிடங்களும் செயற்கை நீரூற்றுகளும், கால்வாய்களும், நீர்த்தேக்கங்களும், கண்கவரும் கட்டிட உள் அலங்காரங்களும், குடிநீர் மற்றும் கழிவுநீர் போக்கிகளும், மழைநீர் சேகரிப்பும் நம்மை எங்கோ அதிசய உலகிற்கு இட்டுச் செல்கின்றன. இத்தகைய மாபெரும் வளர்ச்சிக்கு பழந்தமிழ் மக்கள் மிகப பெரிய அடித்தளத்தை நமக்குத் தந்து சென்றிருக்கிறார்கள். இதனை உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால் இலக்கியம் என்னும் கால எயந்திரத்தில் சற்று பின்னோக்கிப் பயணிக்க வேண்டும். இலக்கியம் என்னும் காலச் சக்கரத்தைப் பின்னோக்கிச் செலுத்தினால் இன்று நாம் அடைந்துள்ளது வளர்ச்சியே. புதிய கண்டுபிடிப்புகள் அல்ல என்பதனைத் தெற்றென உணர்ந்து கொள்ள இயலும். சங்கக் காலம் தொடங்கி இன்று வரை நிகழ்ந்த, நிகழ்கின்ற, நிகழக்கூடிய அனைத்தையும் பதிவு செய்து காட்டுகின்ற கோப்பாகவே இலக்கியங்கள் அமைந்துள்ளன.

உழவு, நெசவு, சிற்பம், ஓவியம், கட்டிடம் என பல நிலைகளிலும் தொழில் நுட்பங்கள் மிகச் சிறந்து விளங்குவதைக் காண முடிகின்றது. சங்க இலக்கியப் பாடல்களில் தமிழர்களின் குடியிருப்பு,வாழ்க்கை அமைப்புமுறைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரை ஆராயத் தலைப்படுகின்றது.

**சங்ககால வீட்டமைப்புமுறை**

சங்க காலத்தில் தனிப்பட்டோர் வீடு கட்டும் பொழுது கட்டட விதிமுறைகளையெல்லாம் பின்பற்றிச் செயற்பட்டார்களா என்ற ஐயுறலாம். ஆனால், பண்டைக் காலத்திலிருந்தே மயமதம் எனும் சிற்ப நூல் வழக்கிலிருந்துள்ளது. தென்னாட்டில் மயன் கொள்கையும் வடநாட்டில் விசுவகர்மாவின் கொள்கையும் வழக்கிலிருந்து வந்துள்ளமைக்குக் குறிப்புகள் உள்ளன. சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதையில்,

> "நுண்வினைக் கம்மியர் காணா மரபின்
> துயர்நீங்கு சிறப்பினவர் தொல்லோ ருதவிக்கு
> மயன் விதித்துக் கொடுத்த மரபின அவை தாம"
> சிலப்பதிகாரம் (புகார் காண்டம் - 106-108)

என வரும் அடிகளை ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இனி, வீடுகட்டும் பொழுது பின்பற்றக் கூடிய சில விடுமுறைகளைக் காண்போம்.

சிறு வீடாயினும் பெரிய மாளிகையாயினும் கட்டக் கலை அடிப்படையில் வீடு கட்டும் மனையிடத்தை வரையறை செய்து கொள்ள வேண்டும். அடுத்து, வீடு பறித்தல் (அடிப்படை – அத்திவாரம் - அமைக்கப் பள்ளம் தோண்டுதல்), கல்லும் சுண்ணாம்பும் கலந்து அழுத்தமாக அடிப்படை போடுதல், சுவர் அமைத்தல், முதல் வாயில் (முகப்பு நிலை) வைத்தல், காலதர் (ஜன்னல்) அமைத்தல், விட்டம் அமைத்தல், மேற்கூரையைத் தேர்ந்து அமைத்தல், தளவரிசை அமைத்தல், சுவர்களக்குச் சுண்ணாம்புக் கலவை பூசுதல், வெள்ளையடித்தல், தச்சுக் கழித்தல் (கண்ணேறு படாதிருக்க ஆவன செய்தல்), புதுமனை புகுதல் முதலிய பலவும் கட்டக் கலையுடன் தொடர்பு கொண்டவையாகும். இவற்றையெல்லாம் முன்னோர்கள் அனுபவ மரபுச் செல்வமாக ஏற்றுச் செயற்படுத்தி வந்துள்ளனர்.

மண் சுவர்க் குடிசையில் வாழ்ந்தவன் நாகரிகப்படி நிலையில் செங்கற்களை அடுக்கிச் சுவரமைத்து வீடு கட்டியுள்ளான் என்பது,

"சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்" (பெரும்பாணாற்றுப்படை – 405) (சுடுமண் - சுட்டமண், செங்கல்)

"இட்டிகை நெடுஞ்சுவர்" (அகநானூறு 167 : 13) (இட்டிகை ஸ்ரீ செங்கல்)

எனவரும் செய்யுட் பகுதியாலும், தூண் வைத்துக் கட்டும் இல்லம் இருந்தமை பற்றிச்,

> "சிற்றில் நற்றூண் பற்றி" (புறநானூறு 86 : 1)
> "கவை துற்ற நாற்காற் பந்தர்ச் சிறுமனை வாழ்க்கை" (புறநானூறு : 29 : 19 – 20)
> (கவைதுற்ற ஸ்ரீ பிரிவு தோன்ற)

எனவரும் செய்யுட் பகுதியாலும், புல்லாலும் வரகு வைக்கோலாலும் தென்னங் கீற்றாலும் வீட்டின் கூரை வேய்ந்த பாங்கினைப்,

> புல்வேய் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து (புறநானூறு 120 : 13)
> படலைப் பந்தர் புல்வேய் குரம்பை (அகநானூறு 87 : 3)

என்ற பாடல் வரியின் மூலம் காணலாம். மிகப் பண்டைய காலத்திலேயே ஓவியம் போன்ற மனைகள் கட்டக்கலை நேர்த்தியுடன் கட்டப்பட்டிருந்தன. இதனை,

> ஓவத்தன்ன இடனுடை வரைப்பின் (நற்றிணை : 182 : 2)
> ஓவத்தன்ன வினைபுனை நல்இல் (அகநானூறு 98 : 11)
> (ஓவம் ஸ்ரீ ஓவியம்)

எனவரும் செய்யுட் பகுதிகளால் தெரிந்து கொள்ளலாம். பெருமனைகள் கட்டிய காலத்தில், மக்கள் தம் வளத்துக்கும் வசதிக்கும் ஏற்ப வீட்டின் பல பக்கங்களிலும் படிகளுடன் கூடிய திண்ணைகளைக் கட்டி வாழ்ந்துள்ளனர்.

மாடம், மண்டபம் முதலிய உயர்தரமான கட்டங்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. மாடத்துக்குச் சித்திரம் எழிலூட்டும் என்பதைப் பிற்காலத்துப் பவணந்தி முனிவர் தம் நன்னூலில், மாடக்குச் சித்திரம் (55) எனக் கூறிக் காட்டியதை நினைவில் கொள்ளலாம்.

அழகிய அரண்மனை மாடத்தில் தீட்டப்பெற்ற வேங்கைப் புலியின் ஓவியத்தைக் கண்டதும் கரிய பெண்யானை நடுக்க முறுகிறதாம்! இளநங்கையரும் கண்டு அச்சுமுற்ற நடுங்குகின்றனராம்! இதனைப் பரிபாடலில்,

> "எழில் மாடத்துக் கைபுனை கிளர்வேங்கை காணிய வெருவுற்று மைபுரை
> மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புற" பரிபாடல் (10 : 45 – 47)

என்றெல்லாம் சங்க இலக்கியப் பாடல்களில் வீடு கட்டும் அமைப்பு முறைகளையும். மக்கள் எவ்வாறு அதில் வாழ்திருந்தார்கள் என்பதனையும் இப்பாடல் வரிகள் மூலம் காணலாம்.

**மனைக்கான விளக்கம்**

"மனை" என்ற சொல்லிற்குக் குடியிருப்புடைய வீடு, குடும்பம், இல், சிற்றில், பேரில், நற்றாய், பசுதொழுவம், சூதாடு பலகையின் அறை, நில அளவு வகை, மனைவி, வாழ்க்கை, வெற்றிடம், குழி, நிலப்பகுதிகள் எனப் பல பொருள்கள் காணப்படுகின்றன. "மனை" என்ற சொல் பதினைந்து பொருள்களை குறிப்பிடுகின்றது". பொதுவாக மனை என்பதற்கு வீடு என்னும் பொருள்தான் மிகுதியாகக் கூறப்படுகின்றது. மனைவியின் மாட்சி, மனை அமைவிடச் சிறப்புப் பற்றி இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இப்பதிவுகள் மூலம் மனைகள் கட்டப்பட்டிருந்த முறைகள், சுற்றுப்புறச் சூழல் போன்றவற்றை அறியமுடிகின்றன. முறைப் படுத்தப்பட்ட ஒழுங்கான கட்டமைப்பில் அமைந்த குடியிருப்புகளை மனை என்று இலக்கியங்களில் சுட்டப்படுகின்றன. இதனை,

> "கூரை நல்மனைக் குறுந்தொடி மகளிர்" (நற் 79 : 2)
> "……. நளிமனை நெடுநகர்" (ஐங்குறு : 324 – 3)
> "நெடு நா ஒள; மணி கடிமனை இரட்ட" (நற் : 40 : 1)
> "திருவுடைத் திருமனை ஐது தோன்று கமழ் புகை
> வருமழை மங்குலின் மறுகுடன் மறைக்கும்
> குறும்பு அடு குண்டு அகழ் நீள் மதில் ஊரே" (புறம் : 379 : 16-18)
> "துஞ்சு மனை நெடுநகர் வருதி" (ஐங்குறு.60)

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

**சிற்றில்**

"சிற்றில்" என்பதற்கு சிறுகுடில், சிறுவீடு, சிறுமியர் கட்டி விளையாடும் மணல்வீடு, சிற்றில் பருவம் எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது. சிறுவடிவமைப்பையுடைய வீடுகளைச் சிற்றில் என இலக்கியங்கள் கூறுகின்றன. சிறுமிகள் மணலில் கட்டி விளையாடும் சிறுமணல் வீடும் என்று அழைக்கப்படுகின்றது. இதனை,

"சிற்றில் நல் தூண்…………..." (புறம். 56 : 1)
"வரிபுனை பரி சிறந்து ஓடி" (நற்.123 : 8)

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன. இத்தகைய வீடுகள் தூண்களுடன் கூடிய அமைப்புடன் இருந்துள்ளன. வளைந்த கால்களைத் தூண்களாகக் கொண்டு கட்டப்பட்டிருந்தன. இதனை,

"இடுமுள்வேளி முடக்கால் பந்தர்
புதுக்கலத்து அன்ன செல்வாய் சிற்றில்" (அகம் 394 : 9-10)

வீட்டின் முன் பந்தல் அமைப்புடன் கூடிய காய்ந்த முள் குச்சிகளைக் வேலியாகக் கொண்டு அமைக்கப் பட்ட வீட்டின் கட்டமைப்பைத் தெளிவாக அறிய முடிகிறது. பா்டலடிகளில் செவ்வாய் சிற்றில் என்று கூறப்பட்டுள்ளதால் செம்மண் பூசப்பட்ட சிறிய மனைகளாகத் தெரிகிறது.

**பேரில்**

பெரிய அளவில் கட்டமைக்கப்பட்டிருந்த வீடுகளைப் பேரில் என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. குடியிருப்பதற்குரிய வீட்டின் உறுப்புகள் குலைந்து செல்களால் சிதைக்கப்பட்டிருந்தாலும் ஒழுகாத நிலையில் பெரிய அளவிலான வீடுகள் இருந்துள்ளன. இதனை,

"அந்தோ! எந்தை அடையாப் பேரில்" (புறம். 261 : 1)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

**மூன்றில் அமைப்பும் பயன்பாடும்**

மூன்றில் என்பது வீட்டின் முன்பகுதியாகும். வீட்டின் முன்நில அமைப்பு இன்றைய நாளில் நாகரிக வாழ்விடத்தின் உயர்நிலையாக விளங்குகிறது. பழந்தமிழ் மக்கள் பண்பாட்டினை அறியும் போது முன்றில் பயன்பாடு மிகுதியாக இருந்திருக்கிறது எனலாம். ஏனெனில் முன்றில் பயன்பாடு பற்றிச் சிறப்பாக வாழ்விடச் சூழலுடன் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. குரம்பை, குடில், மனை, வீடு, அரண்மனை போன்ற குடியிருப்புகளில் கட்டமைப்பில் முன்றில் அமைப்பையும் அதன் பயன் பாட்டையும் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றனன. இப்பதிவுகள் வீட்டில் முன் அமைப்பில் பயனுள்ள திறந்தவெளி இடமாக இருந்ததைச் சுட்டுகின்றன. நில பாகுபாட்டிற்கேற்ப வாழ்ந்த மக்களுக்கு பயன்படுமாறு குடியிருப்பின் ஒரு பகுதியாகவும் இருந்ததை அறிய முடிகிறது. வளர்ச்சிக் காலங்களில் உள்ள வீட்டின் கட்டமைப்புகளின் இடம் பெறுகின்ற இப்பகுதி முற்றம் என்று அழைக்கப்படுகிறது.

குறிஞ்சி நிலக்குடியிருப்பு கட்டமைப்பில் முன்றில் அமைப்புகள் திறந்தவெளி இடமாகக் காணப்படுகின்றன. இவ்வமைப்பில் செடி கொடிகள் வளர்ந்து பந்தல் போல இருப்பதால் உறங்கி ஓய்வெடுப்பதற்குரிய இடமாக இருந்துள்ளது. முன்றிலின் முன் பலா, வேங்கை, மல்லிகை போன்ற தாவரங்கள் இடம் பெறுகின்ற செய்தியால் இக்கட்டமைப்புகள் இயற்கைச் சூழலுடன் அமைந்திருந்ததை அறிய முடிகிறது. இதனை,

முன்றில் முஞ்ஞையடு முசுண்டை பம்பி
பந்தர் வேண்டா பலா் தூங்கு நீழல் (புறம். 320 : 1-2)
"…………………… செவ்வேர்ச்
சினைதொறும் தூங்கும் பயம் கெழு பலவின்
கிளையுடைய முன்றில்" (நற்.77: 4-6)
"கூதளம் கவினிய குளவி முன்றில்
செழுங்கோள் வாழை அகல் இலைப் பகுக்கும்"
(புறம் : 168 : 12-13)

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. குறிஞ்சி நிலமுன்றில் கட்டமைப்பின் பயன்பாட்டினை,

"குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுவினிய தேறல் மகிழ்நது
வேங்கை முன்றில் குரவை அயரும்" (புறம். 129 : 1-3)
"தேம் பிழி நறவின் குறா் முன்றில்" (அகம் : 78 : 7)

என்ற பாடல்வரிகள் விளக்குகின்றன.

**எயினர் குடியிருப்பு**

ஈந்தின் இலையால் வேயப்பட்டு முன்னால் ஆன மேற்புறமிட்ட குடில் உலகின் நாடோடிகளால் திரிந்த காலகட்டத்தில் மனிதன் அகப்புற காரணிகளின் பாதிப்பிலிருந்து தம்மை காப்பாற்றிக் கொள்ள தற்காலிக இருப்பிடங்களை தீர்மானித்து இருக்கலாம். பின்னர் அம்மனிதன் இடம் பெயர்ந்து ஆற்றங்கரைகளில் தங்கி பல இனக் குழுக்களாகப் பிரிந்து ஒரு சமுதாய நிறுவனமாக, நிலவுடைமை சமுதாயமாக திகழ்ந்த ஒரு காலக்கட்டத்தில் தான் தனக்கென நிலையான ஓர் இருப்பிடம் உரையுள் தேவை என நினைத்து அதனை நிர்மானித்து இருக்கலாம். இது ஒரு முகமே. குடியிருப்பை சுற்றி ஊகம் புல் மதில், முள்மரவேலி, கண்ணயமர ஒட்டுக்கதவு, நெடிய கழுக்களை உடைய ஊர் வாயில் அமைத்தன (பெரும். 117-133).

இவர்களது குடியிருப்பு அகன்ற இல்லங்களாய் விளங்கின. இவர்களது குடியிருப்பைப் பற்றி மலைப்படுகடாம்,

> "அகனுள் ஆங்கண் கழிமிடைந்து இயற்றிய
> புலவேய் குரம்பை..." (மலைபடு., 438-439)

என்று கூறுகிறது.

**மீனவர் குடியிருப்பு**

வேழக்கோல் எனப்படும் பேய்க் கருப்பந் தெட்டையை வரிசையாக வைத்து, இடையிடையே காஞ்சி மரம் போன்ற மென்மையான மரக்கொம்புகளை வைத்து தாழை நாரால் கட்டிய தடுப்பை புல் வேயப்பட்ட குடில். இவை அனைத்தும் நகரத்திலிருந்து தொலைவில் அமைந்த புறஞ்சேரிகளாக இருக்கலாம். இவர்கள் அமைத்துக் கொண்ட இல்லங்கள்., தொழிலோடு சார்ந்தவையாய் இருத்தலை உணர முடிகின்றது. இன்றும் கூட இவற்றைப் பயன்படுத்தி குடில்களை அமைக்கும் வழக்கத்தைக் காண முடிகின்றது. Resorts என்று சொல்லப்படும் தங்குமிடங்களில் இத்தகைய குடில்களைக் காண முடிகின்றது.

**நகர்ப்புறங்களில் அமைந்த இல்லங்கள்**

நகரங்களில் காணப்பட்ட இல்லங்கள் அழகுடையதாய், கலை நயத்தோடும் கற்பனை வளத்தோடும் கட்டப்பட்டதாய் இருந்தன. இருமருங்கும் இல்லங்கள் அமைந்த வீதிகளாயக் காணப்பட்டன. இல்லங்கள் அனைத்துமே காற் நுழையக் கூடியதாய் அமைக்கப்பட்டிருந்தன. இச்செய்தியினை,

> "ஆறு கடைந்த அகல் நெடுந்தெரு (நெடுநல்., 30)
> யாறென் கிடந்த தெரு" (மலைபடு. 481)
> "சில்காற்று இசைக்கும் பல்புழை நல்கில்
> யாறு இடந்தன்ன அகல்நெடுந்தெரு" (மதுரைக்காஞ்சி 358-359)
> "வளி நுழையும் வாய் பொருந்தி" (பட்டினப். 157)

என்னும் அடிகளின் மூலம் உணரலாம். ஒரு சில நகரங்களில் இல்லங்கள் மிக உயரமானதாக அமைந்திருந்தன எனலாம். ஏனெனில் பருந்துகளும் தங்கிச் செல்லும் தன்மையுடையதாய் இருந்தன. பருந்துகள் எப்போதுமே உயரப் பறக்கும் இயல்புடையன. மதுரையில் வணிகர்த் தெருவில் காணப்பட்ட இல்லங்கள் குறித்து மதுரைக் காஞ்சி பேசுகையில்,

> "குறும்பல் குழவின் குன்று கண்டன்ன
> பருந்திருந்து உசுக்கும் பன்மான் நல்இல்" (501-502)

என்று குறிப்பிடுகிறது. மழைமேகங்கள் வந்து தங்கிச் செல்லும் அளவிற்கு உயர்ந்த மாடங்களை உடையது. இதனைப் பட்டினப் பாலை,

> "மழை தோயும் உயர் மாடத்து" (பட்டினப்பாலை, 145)

என்று குறிப்பிடுகிறது.

இல்லங்களில் மாடங்களும், நிலா முற்றங்களும் அமைந்திருந்தன என்பதனை மதுரைக்காஞ்சி,

> "தென் கடற் திரையின் அசைவளி புடைப்ப
> நிரைநிலை மாடத்து அரமியம் தோறும்" (மதுரைக்காஞ்சி, 450-451)

எனக் குறிப்பிடுகின்றது.

இன்று கிராமங்களில் காணப்படும் சுற்றுக்கட்டு வீடுகளைப் போலவே, அக்காலத்திலும் மிகப்பெரிய நெடிய ஏணிகள் சார்த்தப்பட்ட ஒட்டுத் திண்ணைகளையும், பல கட்டுகளையும் சிறு பெரு வாயில்களையும் நீண்ட இடை கழிகளையும், காற்று உட்புகக்கூடிய சாளரங்களையும் உயர்ந்த மாடங்களையும் உடையதாய் திகழ்ந்தன என்பதனை,

"குறுந் தொடை நெடும் படிக்கால்
கொடுந் திண்ணை பல்தகைப்பின்
புழை வாயில் போகு இடைகழி
மழை தோயும் உயர்மாடம்" (பட்டினப் 142-145)

என்ற அடிகளின் மூலம் உணரலாம்.

மாடங்கள் உணர்ந்து நின்ற மணல்மிக்க தெருக்கள் (ப.530) விண்டோங் மாடத்து விளக்கு சுவர் உகுந்த நாடு (ப. 546) மாடங்கள் ஓங்கிய தெருக்களில் வாழ்பவர் கூதிர்பருவத்துக் அஞ்ச வேண்டியதில்லை (ப. 279) போன்ற கருத்துகள் பெரும்பாணாற்றுப் படையின் மூலம் கிடைத்துள்ளன. வீடுகள் செங்கல்லால் கட்டப்பட்டு, வெண்மை நிறம் ஊட்டப்பட்டு வானவர் முதல் எல்லா உயிர் சிற்பங்களும் தீட்டப்பட்டன என மணிமேகலை கூறுகிறது.

### பொதுவிடங்கள்

மக்கள் வாழும் இருப்பிடங்கள் மட்டுமல்லாது மக்கள் இயங்கும் இடங்களும் கட்டிடக்கலை நுட்பத்தேடு அமைக்கப்பட்டிருந்தன. கலங்கரை விளக்கங்கள், அணைகள், சுருங்கைகள், குளங்கள் குறித்த தெளிந்த சிந்தனை இலக்கியங்களில் காணப்படுகின்றன.

### கலங்கரை விளக்கம்

"விண்ணைத் தீண்டும் உயரம், ஏணி
சார்த்தியும் ஏறுவதற்கு அரியது
தட்டு ஓடு இட்டுச் சாந்து பூசப்பட்ட மாடம்
உச்சியில் விளக்கு
விண்பொர நிவந்த மாடம், ஏணி சார்த்திய
மாடம் சென்னிமாடம், வேயா மாடன் என
பல மாடங்கள்" (பெரும்., 349-357)

இக்கலங்கரை விளக்கங்கள் கலங்களை வழி நடத்தி கடலிற் இயங்க வழி கோலின. இவையே இன்று நாம் காணும் நவீன கலங்கரை விளக்கத்திற்கு முன்னோடி எனலாம்.

### நாடக அரங்கு

இன்று அமைந்துள்ள தொழில்நுட்பத்தோடு கூடிய நாடக அரங்கங்களைப் போலவே சங்க காலத்திலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

கண்ணுக்குக்கண் ஒரு சாண் என வளர்ந்த மூங்கில் கொண்டு 24 விரல் அளவினதாக செய்யப்பட்டனது. அக்கோலால் 7 கோல் அகலம் 8 கோல் நீளம் 1 கோல் குறட்டு உயரம், உத்தரப் பலகைக்கும் தளப்பலகைக்கும் இடையே 4 கோல் அளவும் உடையதாய், இருவாயில் 4 வகை வருண பூதங்கள் எழுதப்பட்ட மேற்புறம், தூண்களின் நிழல் நாயகப்பத்தி அவையில் விழாத நிலை ஒளி (விளக்கு) ஊட்டப்பட்ட முறை ஒருமுக, பொருமுக, கரந்துவரல், எழினி, முத்துமலை, சரிகை, நாமம் எனத் தொடங்கவிடப்பட்ட முறை (சிலப்பதிகாரம் ஆ.கே. சண்முகம் செட்டியார், உரை, ப. 109) என முறையான தொழில்நுட்பத்துடன் அமைந்திருப்பதை உணரலாம்.

### நீர்நிலைகளும் கழிவுநீர் கால்வாய்களும்

குளங்கள் வெட்டிய செய்தியையும், அதைக் காத்த தன்மையையும் கீழ்வரும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

"நுரைத் தலைக் குரைப் புனல் வரைப்பு
அகம் புகுதொறும் (பொருநர், 240)
குளநீர் அயர
தோள்தாழ் குளத்த கோடு காத்திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பின் (பெரும்., 273-274)

காட்டையழித்து, நாட்டைப் பண்படுத்திய மன்னர்கள் அணைகள் போன்றவற்றை நிர்மாணித்து இருக்கலாம். வருபுனல் கற்சிலை (மதுரைக். 725) என்ற அடி இக்கருத்தை உணர்த்துகின்றது. 'கற்சிறை' என்பதற்கு உரையாசிரியர்கள் கல்லணை எனக் குறிப்பிட்டுள்ளனர். இதிலிருந்து கல்லாகிய அணை கட்டியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

கட்டிடங்களை நிர்மாணிக்கும் போதே, அவற்றிலிருந்து வெளியேறும் நீரினை எவ்வாறு வெளியேற்றுவது என்பதையும், சுகாதார முறையோடு அதனை அமைப்பதிலும் ஆர்வம் காட்டியவர்களாய் இலக்கியங்கள் படைத்துள்ளன.

> "நகரின் நடுவில் புதை சாக்கடைகள் அமைந்திருந்தன
> செங்கல் மற்றும் கருங்கல்லை தோண்டி, நகரில்
> யாரும் அறியாமல் அதனை அமைத்திருந்தனர்" (பரி. 20-104)

இதனை நெடுமால் சுருங்கை நடுவழிப் போந்து,

> "கல்லிடித் தியற்றிய இட்டுவாய் கிடங்கின் நல்லெயில் (மதுரைக். 730-731)

என்பதன் மூலமும் ஒழுகுநீர் புகுகை ஒருத்தரும் அறியாதபடி மறத்துபடுத்த வீதி வாய்த்தலை என்பர் அரும்பத உரையாசிரியர்[2] என்பதன் மூலமும் உணரலாம்.

## மதுரை நகரமைப்பு

தற்கால கணனி காலமாக மாறிய நிலையில் எல்லா அறிவியல் வளர்ச்சிகளையும் எட்டிவிட்ட நிலையில் நகரமைப்பு இன்றும் சீர்செய்ய வேண்டிய ஒன்றாகத் திகழ்கின்றது. ஆனால் பரிபாடல் மதுரையில் திட்டமிடப்பட்ட நகரமைப்பைக் காட்டுகின்றது.

> "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
> பூவொடு புரையுஞ் சீருர் பூவின்
> இதழகத் தனைய தெருவம் இதழகத்
> தரும் பெர்குட் டனைத்தே அண்ணல் கோயில்
> தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்" (பரிபாடல் திரட்டு 7 : 1-5)

திருமாலின் கொப்பூழில் உதித்த தாமரைப்பூப் போன்ற ஊரும்,பூவின் இதழ்கள் போன்ற அழகிய தெருக்களும்,இதழ்களில் இருக்கும் இலக்குமிதேவி போல நகரின் நடுவே அண்ணலாகிய ஈசனின் கோயிலும்,பூந்தாது போன்ற தமிழ்க்குடிமக்களும்,பூற்தாதுக்களை உண்ணும் பறவைகள் போல நகரின் வாமும் மற்ற மக்களும் மாநகர் மதுரை வாழ்ந்தர்கள் என்பதனை பரிப்பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

காவிரிப்பூம்பட்டினம்இ மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என்ற இரு பிரிவு ஐவகை மன்றங்கள் நாளங்காடி அல்லங்காடி நாற்சந்தி, தேரோடும் பெரிய வீதி, முடுக்கர் எனப்படும் சிறிய வீதி எழு நிலைமாடம், அதில் தேர் போன்ற 'புரம்' என்னும் அமைப்பு என திட்டமிடப்பட்ட தொழில்நுட்பத்தோடு கூடிய நகரமைப்பை சிலம்பு காட்டுகின்றது.

## கோயில்கள்

பழந்தமிழ் இலக்கியங்கள் பலவகையான கோயில்களை நமக்கு உரைக்கின்றன. சங்க காலத்தில் செங்கல் கோயில் கட்டப் பயன்பட்டிருக்கிறது. சுடுமண் ஓங்கிய நெடுநிலைக்கோட்டம் கோயில் கோட்டம் என குறிக்கப்பட்டுள்ளது. அகநானூறு செங்கல்லால் கட்டப்பட்டு, மரவிட்டம், சுவர்மீது சுண்ணாம்பு பூசப்பட்டிருப்பதை,

> இட்டினை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
> முணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து
> எழுதளி கடவுள் போகவிற்... (அகம். 167)

என்ற பாடல் உணர்த்துகின்றது.

**முடிவுரை**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (குறள்-45)

இல் என்ற வீட்டில் அன்பும் அறமும் உடையதாக விளங்குமானல் அந்த வாழ்க்கையில் பண்பும் பயனும் அதுவேயாகும். இல்வாழ்க்கை என்பது குடும்பத்திலுள்ள மக்களுக்காக வாழும் வாழ்க்கை எனவும் இல்லறத்தை நடத்துவது இன்ப நுகர்ச்சிக்காக மட்டுமன்று அது பலருக்கும் துணையாக நின்று உதவுவதற்குறிய அறமானச் செயலாகும். இல்லறத்தில் மாந்தர் தாம் தமக்கு எனத் தன்னலவாழ்வு வாழாமல் துணைவி, பிள்ளைகள், பெற்றோர்,சுற்றம், விருந்தினர், வறியவர் ஆதர்வு நாடுவோர் முதலானோர்க்காக மேற்கொள்ளும் அறவாழ்வே குடும்ப வாழ்க்கை (அல்லது) இல்வாழ்க்கையாகும். இவ்வாறு அனைத்து வகையான மக்களுக்காக அறம் சார்ந்த செயல்களைச் செய்ய இல் (மனை) என்ற அமைப்புமுறையைச் சங்ககால மக்கள் உருவாக்கினர்கள்.

மக்களானவர்கள் மனை அமைத்து வாழ்ந்த இடத்தை வாழ்விடம் என்றும் இவ்வாழ்விடத்தை நில அமைப்புக்கேற்றவாறு வீடுகட்டி வாழ்ந்து வந்தார்கள்.காலப்போக்கில் மக்களானவர்கள் தொழில்நுட்ப பரிமாணவளர்ச்சிக்கேற்ப கதவுக்குப்பிடி பொருத்துதல், மரக்கதவுகள்வைத்தல், இணைப்புகளுக்கு வெண்சிறுகடுகு சாந்துப்பூசுதல், மழைநீர் நிலா முற்றத்தில் விழும்படி அமைத்தல், ஓவியங்கள் வரைதல், சுவற்றிற்கு சிவப்பு மற்றும் வெண்மை நிற பூச்சிகள் பூசுவது, என கட்டுமானப் பொறியாளர்கள் மற்றும் வரைப்படப் பொறியாளர்கள் உதவியுடன் வீட்டைக்கட்டினார்கள். மேலும் மக்கள் கோயில்கள், கலங்ககரைவிளக்கம், அணைகள், குளங்கள், சத்திரம்,நாடக அரங்குகள் போன்ற பொது இடங்களையும் கட்டி கூடி மகிழ்ந்தனர். நகரமைப்பில் மக்கள் ஐவகை மன்றங்கள், நாளங்காடி, அல்லங்காடி, நாற்சந்தி, தேரோடும் பெரியவீதிகள்,ஏழுநிலை மாடங்கள் போன்ற அமைப்பு நிலைகளையும் உருவாக்கினார்கள்.இவ்வாறாக சங்ககால மக்கள் தான் வாழுகின்ற வாழ்விடத்தை நினைவுச் சின்னமாகவும், எச்சமாகவும், உதராணமாகவும், சான்றாகவும், காலத்தால் அழியாத பெட்டகமாகவும், வருங்கால சந்ததியனருக்கு வழிக்காட்டியாகவும், முன்னோடியாகவும் திகழ்ந்து இருக்கின்றார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

**துணைநூற்பட்டியல்**


- சண்முகம் செட்டியாா், ஆா்.கே. (உ.ஆ) சிலப்பதிகாரம் (புகாா் காண்டம்) கோயமுத்தூா், புதுமலா் நிலையம், முதற்பதிப்பு, செப். 46.
- சோமசுந்தரனாா்.பொ.வே, (உ.ஆ), அகநானூறு,புறநானூறு, சென்னை, கழக வெளியீடு, முதற்பதிப்பு, டிச. 1970.
- சோமசுந்தரனாா்.பொ.வே (உ.ஆ), நற்றிணை, சென்னை, கழக வெளியீடு, முதற்பதிப்பு, ஜனவரி, 1957.
- சோமசுந்தரனாா்.பொ.வே (உ.ஆ), பரிபாடல், சென்னை, கழக வெளியீடு, முதற்பதிப்பு, ஜனவரி, 1957.
- மாணிக்கனாா்.அ (உ.ஆ), பத்துப்பாட்டு, இரண்டாம் தொகுதி, சென்னை, கழக வெளியீடு, முதற்பதிப்பு, 1999.
- சசிவல்லி, வி.சி. பண்டைத் தமிழா் தொழில்கள், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு, 1989.
- திருநாவுக்கரசு,க.த. (ப.ஆ), தமிழ் பண்பாடு, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு, 2001.


## Book Reference


Manikanaar. (1999). *Pathupaatu-Irandam Thoguthi*. (1st ed.). Chennai: Kzhaga Veliyeedu.

Sanmugam Setiyaar. (1970). *Silapadhigaram (Pugar Ganadam)*. (1st ed.). Coimbatore: Pudhumalar Nilaiyam.

Sasivali. (1989). *Pandai Thamilar Tholilkal*. (1st ed.). Chennai: Ulagath Tamilraichi Niruvanam.

Somasundaranar. (1970). *Aganaanooru, puranaanooru*. (1st ed.). Chennai: Kzhaga Veliyeedu.

Somasundharanaar. (1957). *Natrinai*. (1st ed.). Chennai: Kzhaga Veliyeedu.

Somasundharanaar. (1975). *Pari Paadal*. (1st ed.). Chennai: Kzhaga Veliyeedu.

Thirunavukarasu. (2001). *Tamil Panbadu*. (1st ed.). Chennai: Ulagath Tamilraichi Niruvanam.